A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 65 / 2023**

திரு A. மாரிச்சாமி,
முருகன் கோவில் பின்புறம், முத்துத்தேவனப்பட்டி,
வீரபாண்டி அஞ்சல், தேனி – 625 534.

……..மேல்முறையீட்டாளர்
(திரு A. மாரிச்சாமி)

எதிர்

உதவி மின்பொறியாளர்/ இ&பே / பழனிசெட்டிபட்டி,
தேனி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தேனி 230 KV துணை மின் வளாகம்,
கும்பம் ரோடு, தேனி – 625 531.

. . . எதிர்மனுதாரர்
(திரு C. உதயகான், உதவி மின்பொறியாளர்/ இ&பே / பழனிசெட்டிபட்டி)

**மனு பெறப்பட்ட நாள்: 04-09-2023**

**கேட்புரை நாள்: 15-11-2023**

**ஆணை நாள்: 17-11-2023**

04.09.2023 அன்று பெறப்பட்ட திரு A. மாரிச்சாமி, முருகன் கோவில் பின்புறம், முத்துத்தேவனப்பட்டி, வீரபாண்டி அஞ்சல், தேனி – 625 534 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 65/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 15.11.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தனது மின் இணைப்பு எண் 503–005–140–இல் தான் செலுத்திய பிணை வைப்பு தொகையின் விகிதசாராப்படி மின்பளுவை பதிவு செய்யாததால் தற்சமயம் கேட்கும் மின்திறன் காரணிக்கான அபராத தொகைகளை திருப்பி வழங்கவும் மற்றும் கூடுதல் மின்பளுவிற்கான மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் கிளையின் அறுவுரையின்படி ரூ.7,325/– செலுத்தப்பட்ட தொகைக்கு வட்டியுடன் திருப்பி தரும்படியும் மற்றும் தனக்கு ஏற்பட்ட மனஉளைச்சல் காரணமாக ரூ.50,000/– வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 வழக்கின் சுருக்கம்:**

2.1 தனது மின் இணைப்பு எண் 503–005–140–இல் அனுமதிக்கப்பட்ட மின் பளுவை சரி செய்து தருமாறு மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரரிடம் விண்ணப்பித்துள்ளார்.

2.2 தான் செலுத்திய தொகையை வட்டியுடன் திரும்ப வழங்குமாறு மேல்முறையீட்டாளர் தேனி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 02.05.2023 அன்று அணுகியுள்ளார்.

2.3 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், தேனி மின் பகிர்மான வட்டம் 05.08.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 மன்றத்தின் தீர்வு :**

3.1 தேனி மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 05.08.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
>
> *நுகர்வோர் பேரேடு (consumer ledger) மூலம் தங்களது மின் பயன்பாடு கணக்கு Monthly Consumption) 22.11.2007 முதல் கணினியில் ஆய்வு செய்ததில் தாங்கள் 2.5 KW (கிலோ வாட்) மின் பளு மட்டுமே பெற்று உபயோகம் செய்து வந்த நிலையில்,*

*18.07.2015ல் மின் பளு 19.0 KW கிலோ வாட்டாக உயர்ந்துள்ளது. 19.0 KW கிலோ வாட்டுக்குரிய விண்ணப்ப பதிவு கட்டணம், மின் அளவி சோதனைக் கட்டணம், காப்புத் தொகை மற்றும் வளர்ச்சித் தொகை என மொத்தம் ரூ. 6,525/- மட்டும் கடந்த 16.07.2015 அன்று தாங்கள் செலுத்தியுள்ளீர்கள்.*

*03/2023, 05/2023 மற்றும் 07/2023 ஆகிய மின் நுகர்வு மாதங்களில், தாங்கள் மின் பளு 19.0 KW கிலோ வாட்டுக்கு குறைத்த நிலையிலேயே மின் நுகர்வு செய்துள்ளதால், அம்மூன்று மாத திறன் காரணி (Power Factor) அபராதத் தொகையான ரூபாய் 6,529/-(ஆறு ஆயிரத்து ஐநூற்று இருபத்தி ஒன்பது மட்டும்) (2265.22 + 2430.35)ஐ வரும் மாதங்களில் மின் நுகர்வு கட்டணத்தில் (current consumption charges) கழித்து வழங்கிடுவதற்கு இம்மன்றம் முடிவு செய்து உத்தரவிடுகிறது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 15.11.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு A. மாரிச்சாமி அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு C. உதயகான், உதவி மின்பொறியாளர்/ இ&பே / பழனிசெட்டிபட்டி, தேனி மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் 14.12.1990 அன்று 6.4KW+10KVA+540 watts மின் பளுவிற்கு பிணை வைப்புத்தொகை (EMD) ரூ.1,800/- செலுத்தி ரசீது பெற்று பணிமனை

நடத்தி வருவதாகவும், தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி மின் பிரிவில் 22.11.2007ல் கனிணி பதிவேடு தயாரிக்கும் போது தனது மின் இணைப்பின் உண்மையான மின் பளுவான 15.5 KWஐ பதிவேற்றம் செய்யாமல் 0 KW எனவும், பின்பு 23.09.2010 முதல் 0.55 KW எனவும், பின்பு 28.05.2013ல் 2.5 KW எனவும் தவறாக பதிவேற்றம் செய்து வந்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 அதனால் சான்றாவணம் 1ன் படி உதவி மின் பொறியாளர் பழனிசெட்டிபட்டி பிரிவு அவர்களால் தான் 10.47 KW மிள் பளு பயன்படுத்தியுள்ளதாகவும், ஆனால் 2.5 KW தான் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 8KW க்குரிய கூடுதல் தொகையை செலுத்துமாறு தெரியப்படுத்தப்பட்டதாகவும், அதனை தொடர்ந்து தான் ஏற்கனவே 14.12.1990 அன்று 15.5 KW க்காக கட்டப்பட்ட EMD–க்குரிய ரூ.1,800/–க்கான ரசீதுடன் சென்று உதவி பொறியாளர் திரு புனிதபத்மநாபன் அவர்களை சந்தித்து முறையீடு செய்ததாகவும், அவர் செயற்பொறியாளர்/தேனி அவர்களுக்குத் தான் அதிகாரம் என்று அவரை சந்திக்க கூறியதாகவும் அவரோ ஒரு வாரம் அவகாசம் கொடுத்து தன்னுடைய மின் இணைப்பு சோதனை அறிக்கை காணவில்லை எனவே கூடுதல் தொகையை செலுத்தியாக வேண்டும் என்று கூறியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 எனவே, தான் மேற்பார்வை பொறியாளர்/தேனி அவர்களிடம் தனது EMD ரசீதின் உண்மைத் தன்மையுடன் சரிபார்த்து தனக்கு 15.5 KW மின் பளுவை சரிசெய்து கொடுக்க விண்ணப்பித்ததாகவும், ஆனால் அவரோ செயற்பொறியாளர் உதவிப்பொறியாளருக்கே விண்ணபத்தை அனுப்பி தனது முறையீட்டை பரிசீலிக்காமல் மறுத்துவிட்டதாகவும், எனவே, வேறு வழியின்றி மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் முறையீடு செய்து நீதிமன்ற உத்தரவுப்படி அவர்கள் கூறிய மின் தொகை ரூ.7,352/–ஐ வங்கி வரைவோலை மூலமாக செலுத்திவிட்டு, வழக்கு எண் WP(MD)No.19111 of 2015 and MP(MD)No.2/2015–ன் படி 15 KW க்குள் கணக்கீடு செய்ய உத்தரவு பெற்று வந்ததாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 ஆனால் மின்சார அலுவலகத்தில் உயர்நீதிமன்ற உத்தரவையும் மதிக்காமல் தான் பயன்படுத்தாத மின் பளுவான 18.04 KW ஐ 26.09.2015 முதல் பதிவேற்றம் செய்து அப்பளு கடந்த ஆறு மாதத்திற்கு முன்பு 19 KW ஆக மாறி தனக்கு பவர்பேக்டர் அபராதம்

வந்ததாகவும், அதைத் தொடர்ந்து தான் தேனி மாவட்ட மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு முறையீடு செய்து 26.07.2023 அன்று தக்க ஆவணங்களுடன் நேரடி விசாரணையில் கலந்து கொண்டு, அதன் தீர்ப்பு 06.08.2023 அன்று கிடைக்கப்பெற்றதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 அக்கூட்டத்தில் இரண்டு சட்ட உறுப்பினர்கள் (Legal Members) இருந்தும் தனது மேல்முறையீட்டு ஆவணங்கள் எதையும் ஆராயாமல் தன்னிச்சையாக தீர்ப்பளித்துள்ளதாகவும், அதன் சான்றாவணம் 7ன் படியான மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்ற மதுரைக்கிளை உத்தரவை மதித்து அதன்படி ஏன் 15 KW க்குள் தனக்கு மின்பளு பதிவேற்றம் செய்யவில்லை அவ்வாறு செய்திருந்தாலே பிரச்சனை முடிவுக்கு வந்திருக்கும் என தெரிவிக்கவில்லை எனவும், உயர்நீதிமன்ற உத்தரவை மதிக்காத அலுவலர்களுக்கு கண்டனமும் இல்லை எனவும், தவறிழைத்த அலுவலரான திரு. புனித பத்மநாபனை விசாரிக்கவில்லை எனவும், மின் இணைப்பு சார்பான மின்சார அலுவலக ஆவணமான Service Connection Sanction Register (மின் இணைப்பு அனுமதி பதிவேடு)யும் சோதனை அறிக்கையையும் (Test Report) விசாரணைக்கு உட்படுத்தவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 தன் தரப்பு ஆவணமான தான் 14.12.1990ல் செலுத்திய EMD தொகை ரூ.1,800/–க்கான ரசீது–ஐ Memo No SE/IEMC/EE3/AEE1/D–10009/90 (Tech Br) dt.12.05.1990ன் EMD பெறுவதற்கான செயல்முறை ஆணையை ஒப்பிட்டு பார்க்கவில்லை எனவும், அவ்வாறு ஒப்பிட்டு பார்த்தாலே தான் 15.5 KW மின் பளுவிற்கு தொகை செலுத்தியிருப்பது தெரியும் எனவும் அதற்கும் எந்த உத்தரவும் இல்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 22.11.2007ல் (Consumer Ledger) நுகர்வோர் பதிவேடு முதல் தற்போது வரை அனைத்தும் தக்க ஆவணமான Service Connection Sanction (பின் இணைப்பு அனுமதி) பதிவேடு இன்றி தன்னிச்சையானது என்று தான் குற்றம் சாட்டுவதாகவும், (அதுவும் 22.11.2007ல் தனது மின் இணைப்பிற்கு அனுமதிக்கப்பட்ட மின்பளு 0 KW என பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், அதை கூட சரியாக ஆய்வு செய்யாமல் தேனி

மாவட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற உத்தரவில் 2.5 KW என தவறாக குறிப்பிட்டுள்ளதாகவும், அதையே ஆதாரமாக எடுத்துக் கொண்டு தீர்ப்பளித்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 03/2023, 05/2023 மற்றும் 07/2023 மின் நுகர்வு மாதங்களில் வசூலிக்கப்பட்ட பவர்பேக்டர் (PF) அபராதத்தை மட்டும் கழித்து கொடுப்பதாக உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகவும், உண்மையில் தனது மின் பளுவான 15.5 KW ஐ சரிசெய்து கொடுத்தாலே தனக்கு பவர்பேக்டர் (PF) அபராதம் வராது என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 மேற்கண்ட தேனி மாவட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் உத்தரவிலிருந்து தான் உணர்வது அலுவலர்களின் பேராதரவுடன் உள்ள தவறிழைத்த அதிகாரியான திரு புனிதபத்மநாபன் மற்றும் அப்போதைய உயர் அலுவலர்களை காப்பாற்றும் நோக்கிலேயே பாமரனான தனது நியாயமான கோரிக்கைகளை புறம்தள்ளியதாகவும், உயர்நீதிமன்ற உத்தரவையும் மதிக்க மறுப்பதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 தனது ஆவணங்களின் உன்மைத் தன்மையினை ஆராய்ந்து தனது மின் பளுவான 15.5 KW ஐ பதியவும், பவர் பேக்டர் (PF) அபராத தொகையை திரும்பி வட்டியுடன் அளிக்கவும், கூடுதல் மின் பளுவிற்காக மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரை கிளையின் அறிவுரையின் படி ரூ.7,325/–க்கு அளிக்கப்பட்ட தொகையை வட்டியுடனும் எட்டு வருடமாக அழக்களிக்கப்பட்ட தனக்கு ஏற்பட்ட மன உளச்சல் மற்றும் உயர் இரத்த அழுத்த சிகிச்சைக்காகவும், உயர்நீதிமன்ற செலவு தொகைக்காகவும் சேர்த்து தவறிழைத்த அதிகாரியான திரு. புனிதபத்மநாபன் / உதவிப் பொறியாளர் அவர்களின் சொந்தப் பணத்திலிருந்து ரூ.50,000/–ஐ பெற்றுத் தருமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 தேனி மின் பகிர்மான வட்டம், தேனி கோட்டம், நகர்/தேனி உபகோட்டம், பழனிசெட்டபட்டி பிரிவிற்குட்பட்ட திரு A.மாரிச்சாமி அவர்களுக்கு தொழிலக மின் இணைப்பு எண்:05–503–005–140–ல் வழங்கி 27 ஆண்டுகள் ஆனதாகவும், இதனால் மின்இணைப்பு அனுமதி பதிவேடு மற்றும் சோதனை அறிக்கை (Service connection Sanction Reginer & Test Report) இவ்வலுவலகத்தில் கிடைக்கப்பெறவில்லை என்வும், எனவே இவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவில் தற்காலிக தடை மட்டுமே பிறப்பிக்கப்பட்டது. கூடுதல் மின்பளுவிற்கான தொகை வசூலிக்ககூடாது எனவோ அல்லது மின்பளுவை குறைக்க வேண்டும் எனவோ உத்தரவு ஏதுமில்லை.

6.2 திரு A.மாரிச்சாமி அவர்கள் 14.12.1990–ல் செலுத்திய EMD தொகை ரூ.1800/– 13.428 KW மின் பளுவிற்குரிய தொகை எனவும், ஆனால் மனுதாரர் 6.4 KW + 0.540 KW + 10 KVA (15.5KW) மின்பளுவிற்குரிய பிணைவைப்பு தொகை என குறிப்பிடுவது தவறானது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 நுகர்வோர் பதிவேடு இல்லாத காரணத்தினால் Consumer Ledger ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது அதனடிப்படையில் 16.07.2015 அன்று MD Exceeded 2.5 KW–லிருந்து 19 Kw–ஆக உயர்த்தப்பட்டுள்ளதாகவும், இது சம்மந்தமாக அலுவலகத்தில் மின் இணைப்பு அனுமதி பதிவேடு எதும் இல்லை எனவும், மேலும், இதுசம்மந்தமாக நுகர்வோரும் எவ்வித ஆவணங்களும் சமர்ப்பிக்கவில்லை எனவும், ஆனால் இம்மின்பளு உயர்வை மின்நுகர்வோர் ஒப்புக்கொண்டு 19.10.2015–ல் ரூ.14,122/–ஐ மின்பயனீட்டு கட்டணத்துடன் செலுத்தியதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும் அப்போதே மின்பளு உயர்வு சம்மந்தமாக எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை எனவும், தற்போது 8 வருடங்கள் கழித்து தமிழ்நாடு மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் வந்து முறையிடுவது ஏற்புடையதல்ல எனவும், இது சம்மந்தமாக உரிய விதிகளின்படி விசாரணை மேற்கொள்ளப்படும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 பெறப்பட்ட மேல்முறையீட்டு மனுவினை ஆய்வு செய்யும் பொழுது இம்மனு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடுத்த வழக்கு எண். WP

(MD) No.19111/2015 தற்போது வரை நிலுவையில் உள்ளது கண்டறியப்பட்டதாகவும், மேலும் இவ்வழக்கு 29.09.2023 பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகவும், மனுதாரர் இது சம்பந்தமாக எந்த தகவலும் மின்நுகர்வோர் மன்றத்தில் நடைபெற்ற விசாரணையின் போது தெரிவிக்கவில்லை எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 26.07.2023ல் நடைபெற்ற மின்நுகர்வோர் குறைதீர் மன்ற கூட்டத்தில் 03/2023, 05/2023 மற்றும் 07/2023 ஆகிய மின் நுகர்வு மாதங்களில் தாங்கள் மின்பளு 19 கிலோ வாட்டுக்கு குறைத்த நிலையிலேயே மின்நுகர்வு செய்துள்ளதால் அம்மூன்று மாத திறன் காரணி (Power Factor) அபராதத் தொகையான ரூபாய்.6,529/- (அறு ஆயிரத்து ஐநூற்று இருபத்தி ஒன்பது மட்டும்) (2265.22 + 2430.35 + 1833.56 ஐ வரும் மாதங்களில் மின்நுகர்வு கட்டணத்தில் (Current Consumption charges) கழித்து வழங்கிடுவதற்கு 05.08.2023 நாளிட்ட மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் ஆணையிடப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 இந்த மனு தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது மின் நுகர்வோர் குறைதீர்மன்ற கூட்டம் தேனியில் தீர்ப்பு வழங்குவதற்கும் மேற்கண்ட வழக்கு நிலுவையில் இருக்கும்போது மேற்கண்ட வழக்கினை மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உகந்த வழக்கு இல்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் 14.12.1990 அன்று 6.4 KW + 10 KVA + 540 watts மின் பளுவிற்கு பிணை வைப்புத்தொகை (EMD) ரூ.1,800/- செலுத்தி ரசீது பெற்று பணிமனை நடத்தி வருவதாகவும், தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி மின் பிரிவில் 22.11.2007-இல் கனிணி பதிவேடு தயாரிக்கும் போது தனது மின் இணைப்பின் உண்மையான மின் பளுவான 15.5 KWஐ பதிவேற்றம் செய்யாமல் 0 KW எனவும், பின்பு 23.09.2010 முதல் 0.55 KW எனவும், பின்பு 28.05.2013-இல் 2.5 KW எனவும் தவறாக பதிவேற்றம் செய்து வந்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மேலும், உதவி மின் பொறியாளர், பழனிசெட்டிபட்டி பிரிவு அவர்களால் தான் 10.47 KW மின் பளு பயன்படுத்தியுள்ளதாகவும், ஆனால் 2.5 KW தான் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 8KW க்குரிய கூடுதல் தொகையை செலுத்துமாறு தெரியப்படுத்தப்பட்டதாகவும், அதனை தொடர்ந்து 14.12.1990 அன்று 15.5KW–க்காக செலுத்தப்பட்ட EMD–க்குரிய ரூ.1,800/–ஐ செலுத்தியதாகவும், 15.5 KW மின் பளுவை சரிசெய்து கொடுக்க மேற்பார்வை பொறியாளரிடம் விண்ணப்பித்ததாகவும், ஆனால் செயற்பொறியாளர் மூலமாக மீண்டும் உதவி மின்பொறியாளருக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டு தனது முறையீட்டை பரிசீலிக்காமல் மறுத்து விட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 திரு A.மாரிச்சாமி அவர்களுக்கு தொழிலக மின் இணைப்பு 05–503–005–140 வழங்கி 27 ஆண்டுகள் ஆனதாகவும், மேல்முறையீட்டாளர் 14.12.1990–ல் செலுத்திய EMD தொகை ரூ.1,800/– 13.428 KW மின் பளுவிற்குரிய தொகை எனவும், ஆனால் மேல்முறையீட்டாளர் 6.4 KW + 0.540 KW + 10 KVA (15.5KW) மின்பளுவிற்குரிய பிணைவைப்பு தொகை என குறிப்பிடுவது தவறானது எனவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 மேலும், நுகர்வோர் பதிவேடு இல்லாத காரணத்தினால் Consumer Ledger ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அதனடிப்படையில் 16.07.2015 அன்று MD Exceeded 2.5 KW–லிருந்து 19 Kw–ஆக உயர்த்தப்பட்டுள்ளதாகவும், இது சம்மந்தமாக அலுவலகத்தில் மின் இணைப்பு அனுமதி பதிவேடு எதும் இல்லை எனவும், மேலும், இதுசம்மந்தமாக நுகர்வோரும் எவ்வித ஆவணங்களும் சமர்ப்பிக்கவில்லை எனவும், ஆனால் இம்மின்பளு உயர்வை மின்நுகர்வோர் ஒப்புக்கொண்டு 19.10.2015–ல் ரூ.14,122/–ஐ மின்பயனீட்டு கட்டணத்துடன் செலுத்தியதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 இம்மனு தொடர்பாக மேல்முறையீட்டாளர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடுத்த வழக்கு எண். WP (MD) No.19111/2015 தற்போது வரை நிலுவையில் உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். இதனை மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரையுன் போது மேல்முறையீட்டாளரும் ஒப்பு கொண்டார்.

7.7 ஆகவே, இது சம்பந்தமாக நான் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 17(4)–ஐ ஆராய விரும்புகிறேன், மேற்கண்ட விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"XXX XXX XXX*

*17 (4) கீழ்க்குறிப்பிட்டவற்றை பின்பற்றினாலொழிய எந்த முறையீடும், மின்சாரகுறைதீர்ப்பாளரால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.*

*அ) முறையீட்டாளர் மின்சார குறைதீர்ப்பாளருக்கு முறையீடு செய்வதற்கு முன், முறையீட்டில் குறிப்பிட்ட உரிமதாரர், குறைகளை மன்றத்தில் எழுத்து மூலம் முறையீடு செய்திருந்து அந்த முறையீட்டை மன்றம் தள்ளுபடி செய்திருக்க வேண்டும். அல்லது முறையீடு பதிவு செய்த ஐம்பது நாட்களுக்குள் பதில் பெறப்படாமல் இருந்திருக்கவேண்டும் அல்லது முறையீட்டாளருக்கு மன்றம் அளித்த பதிலில் திருப்திஏற்படாமல் இருந்திருக்க வேண்டும். பிரிவு: 17(1) இல் விவரிக்கப்பட்டுள்ள பொதுத்தன்மையான முறையீட்டிற்கு இது பொருந்தாது.*

*ஆ) முறையீடு, முறையீட்டிற்கான நிகழ்வு நடந்த மூன்று மாதங்களுக்குள் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.*

*இ) பெறப்படும் முறையீடு தீர்க்கப்படாத ஒன்றாக இருத்தல் வேண்டும். மின்சார குறைதீர்ப்பாளரால் முந்திய விசாரணை நடவடிக்கைகள் மூலமாக தீர்க்கப்பட்ட நுதல் பொருள் (subject matter) கொண்ட முறையீடு, அதே முறையீட்டாளரிடமிருந்து தனியாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறையீட்டாளர்களுடன் சேர்ந்தோ அல்லது எத்தரப்பினரிடமிருந்து வந்தாலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*ஈ) முறையீட்டின் குறிப்பிட்ட புகார் ஏதாவது நீதி மன்ற நடவடிக்கையில் நிலுவையில் இருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் பெற்ற நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதியாணையோ வழங்கியிருந்தாலோ, அவ்வாறான புகார் கொண்ட முறையீடாக இருக்கக் கூடாது.*

*உ) முறையீடு அற்பமானதாகவும் எரிச்சல் தரக்கூடியதாகவும் இருக்கக் கூடாது;"*

7.8 மேற்கண்ட விதி 17(4)(ஈ)–ஐ கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது, மின்குறைதீர்ப்பாளரின் முன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள புகார் ஏதாவது நீதிமன்ற நடவடிக்கையில் நிலுவையிலிருந்தாலோ அல்லது அப்பொருள் மீது தக்க அதிகாரம் உடைய நீதிமன்றம் ஏற்கனவே கட்டளையோ, தீர்ப்போ அல்லது இறுதி ஆணையோ வழங்கியிருந்தாலோ அத்தகைய முறையீட்டினை மின்சார குறைதீர்ப்பாளர் ஏற்றுக்கொண்டு தீர்வு வழங்க முடியாது என்று தெரிகிறது.

7.9 இவ்வழக்கில் மேல்முறையீட்டாளருக்கு அனுமதிக்கப்பட்ட ஒப்பந்த மின்பளு சம்பந்தமாக அவருடைய மின் இணைப்பு எண் 503–005–140–இல் மின் இணைப்பு கோரும் சமயத்தில் செலுத்திய பிணை வைப்பு தொகையின் அடிப்படையில் மின்பளுவை பதிவு செய்ய மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடுத்த வழக்கு எண். WP (MD) No.19111/2015 தற்போது வரை நிலுவையில் உள்ளது என தெரிய

வருகிறது. எனவே, மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 17(4)(ஈ) இன் படி மேல்முறையீட்டாளர் செலுத்திய தொகையை திரும்ப வழங்க கோரும் மின்னிணைப்பு சம்பந்தமாக வழக்கு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ளதால் மேல்முறையீட்டாளரின் மேல்முறையீடு சம்பந்தமாக தீர்வு வழங்க இயலாது எனவே, இந்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

## 8.0 முடிவுரை:

8.1 மேற்கூறிய பத்தி 7-ல் உள்ள தீர்வுகளின் படி, மேல்முறையீட்டாளர் இம்மனு தொடர்பாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடுத்த வழக்கு எண். WP (MD) No.19111/2015 தற்போது வரை நிலுவையிலுள்ள காரணத்தால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை சம்பந்தமாக தீர்வு காண இயலாது என தெரிவிக்கப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண்.65/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

பெறுநர்

1. திரு A. மாரிச்சாமி, – By RPAD
முருகன் கோவில் பின்புறம்,
முத்துத்தேவனப்பட்டி,
வீரபாண்டி அஞ்சல், தேனி – 625 534.

2. உதவி மின்பொறியாளர்/ இ&பே / பழனிசெட்டிபட்டி,
தேனி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
தேனி 230 KV துணை மின் வளாகம்,
கும்பம் ரோடு, தேனி – 625 531.

3. மேற்பார்வை பொறியாளர், – By email
தேனி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம், NRT நகர் மெயின் ரோடு, தேனி – 625 531.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.